**செய்தி வெளியீடு**

## நான்கு முக்கிய குடித்தன அளவீடுகளின் வெளிக்கள வேலைகள் ஆரம்பம்

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**
**தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார விவகார அமைச்சு**

**NR/9/2016/1 தொலைபேசி : 011-2877959 தொலைநகல் : 011-2147447 தை 21, 2016**

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம் 2016 இல் நான்கு குடித்தன அளவீடுகளை நடாத்துகின்றது. குடித்தனக் கூறின் வருமானம் மற்றும் செலவுகள் பற்றிய அளவீடுகளின் வெளிக்கள வேலைகள் மற்றும் சிறுவர் செயற்பாட்டு அளவீட்டுக்குரிய வெளிக்கள வேலை என்பன ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேலும் மக்களியல் மற்றும் சுகாதார அளவீடானது யூன் 2016 இல் இருந்து நடாத்தப்படும்.

இலங்கை தொழிற்பல அளவீடானது 1990 இருந்து காலாண்டு அடிப்படையில் நடாத்தப்பட்டு வருகின்றது. இலங்கையின் தொழிற்பலம், தொழில் வாய்ப்பு மற்றும் தொழில் வாய்ப்பின்மை போன்ற முக்கியமான புள்ளி விபரங்கள் ஆனது இவ் அளவீடுகளிலிருந்து சேகரிக்கப்பட்ட தரவுகளிலிருந்து பெறப்படுகின்றது.

குடித்தனக் கூறின் வருமானம் மற்றும் செலவினங்கள் பற்றிய அளவீடானது தனிநபர் வருமானம், தனிநபர் செலவினம், வறுமை மற்றும் சொத்துக்களின் உரிமை போன்றவற்றை உள்ளடக்கிய புள்ளிவிபரங்களை கணிப்பதற்கு நடாத்தப்படுகின்றது. இவ் அளவீடானது மூன்று வருடங்களுக்கு ஒரு முறை நடாத்தப்படுவதுடன் கடைசிச் சுற்றானது 2012/13 இல் நடாத்தப்பட்டது.

இச் சிறுவர் செயற்பாட்டு அளவீட்டின் மூலம் 5 வயதிலிருந்து 17 வயதுக்கு இடைப்பட்ட சிறுவர் செயற்பாடுகளின் தகவல்களானது திரட்டப்படுகின்றது. திணைக்களமானது முன்னர் இந்த அளவீட்டை 1999 இலும் 2008/2009 இலும் நடாத்தியிருக்கின்றது. இந்த வருடம் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களமானது மூன்றாவது தடவையாக இந்த சிறுவர் செயற்பாட்டு அளவீட்டை நடத்துகின்றது. சிறுவர் செயற்பாட்டு அளவீடு 2016 ஆனது தொழிலாளர் உறவுகள் அமைச்சினதும் சர்வதேச தொழிலாளர் அமைப்பினதும் கூட்டுடன் நடாத்தப்படுகின்றது.

இலங்கையில் கிட்டத்தட்ட 5.2 மில்லியன் வீட்டுக் கூறுகள் உள்ளன. நன்கு பரீட்சிக்கப்பட்ட மாதிரி திட்டமிடலுக்கமைக்காக முழு நாட்டையும் பிரதிபலிக்கக் கூடிய 25,000 வீட்டுக் கூறுகளானது தரவு சேகரிப்புக்காக தெரிவு செய்யப்பட்டிருந்தது. வீட்டுக் கூறுகளின் வேறு மாதிரியானது சிறுவர் செயற்பாட்டு அளவீட்டிற்காக தெரிவு செய்யப்பட்டிருக்கையில் ஒரே

வீட்டுக் கூறுகளானது தொழிற்பல அளவீட்டுக்கும் குடித்தனக் கூறின் வருமானம் மற்றும் செலவினம் பற்றிய அளவீட்டுக்குமாகத் தெரிவு செய்யப்பட்டுள்ளது.

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபர திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட அறிக்கையொன்றில் தரவு சேகரிப்பதற்காக இந்த அளவீடுகளுக்காக தெரிவு செய்யப்பட்ட வீட்டுக் கூறுகளுக்கு நன்கு பயிற்றுவிக்கப்பட்ட திணைக்கள உத்தியோகத்தர்கள் தற்போது வருகை தந்து கொண்டிருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சேகரிக்கப்பட்ட தரவுகள் மிகவும் அவசியமான புள்ளிவிபரங்களைத் தயாரிப்பதற்கு மட்டும் பயன்படுத்தப்படும் என தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் கலாநிதி அமர சத்தரசிங்க அவர்கள் தெரிவித்தார். பதிலளிப்பவர்களினால் கொடுக்கப்பட்ட தகவல்களின் இரகசியத் தன்மையானது உயர்தரத்தில் பாதுகாக்கப்படும் எனவும் சரியான தகவல்களை கொடுப்பதன் மூலமும் இந்த அளவீடுகளை வெற்றிகரமாக நடாத்துவதற்கு அவர்களுடைய முழுமையான ஒத்துழைப்பை வழங்குவதற்கும் அளவீட்டுக்கு தெரிவு செய்யப்பட்ட குடித்தனக் கூறின் தலைவர்களை திணைக்களத்தின் கணக்கெடுப்பாளர்களுக்கு உதவும்படி வேண்டுவதாக கலாநிதி அமர சத்தரசிங்க அவர்கள் தெளிவுபட தெரிவித்தார்.

சிறுவர் செயற்பாட்டு அளவீட்டின் வெளிக்கள வேலையானது 2016 தை மாதத்திலிருந்து சித்திரை மாதம் வரை மேற்கொள்ளப்படும். மேலும் குடித்தனக் கூறின் வருமானம் மற்றும் செலவினம் பற்றிய அளவீடு மற்றும் தொழிற்பல அளவீடானது 2016ம் வருடத்தின் ஒவ்வொரு பகுதியிலும் நடாத்தப்படுகின்ற வருடம் முழுவதுக்குமான அளவீடாகும். கணக்கெடுக்கும் உத்தியோகத்தர்கள் சிறுவர் செயற்பாட்டு அளவீட்டுக்காகவும் தொழிற்பல அளவீட்டுக்காகவும் குறைந்தது ஒரு தடவையும் குடித்தனக் கூறின் வருமானம் மற்றும் செலவினம் பற்றிய அளவீட்டுக்காக தெரிவு செய்யப்பட்ட குடித்தனக் கூறுகள் ஒவ்வொன்றுக்கும் குறைந்தது மூன்று தடவைகளும் வருகை தருவார்கள்.

**தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்**